விலை ரூபா 1—25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 பங்குனி 8 ஜ- ஆகி 28 இதழ் 39
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 21-3 1985

## சுட்டு வீழ்த்தியதாக 'புலிகள்' அறிவிப்பு— ஹெலிகாப்டருக்கு சேதம் மட்டுமே என்கிறார் 'லலித்'!

(கொழும்பு)

விமானப்படை ஹெலிகாப்டர்மீது தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத்தைச்சேர்ந்ததீவிரவாதிகள் நடத்திய தாக்குதலின்போது ஹெலிகாப்டருக்கு சிறிது சேதம்பட்டுமே ஏற்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானப்படை ஹெலிகாப்டரை சுட்டுவீழ்த்தியதாக தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி நிலைமையை விளக்கிக்கூறியுள்ளார்.

விமானப்படையின் ஹெலிகாப்டர்மீது தீவிரவாதிகள் சுட்டதனால் அது கடற்கரையில் வீழ்ந்துவிட்டதாக தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டில் தெரிவித்திருப்பது முற்றிலும் பொய்என்று தெரிவித்த அமைச்சர், இத் தாக்குதலின்போது ஹெலி

(6ம் பக்கம் பார்க்க)

## ராணுவ 'றிசேவ்' படை வீரர்க்கு அவசர அழைப்பு!

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் தொண்டர் றிசேவ் படை வீரர்கள் அனைவரையும் உடனடியாக அவரவர் முகாம்களுக்கு வந்துசேருமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

'றிசேவ்' படைவீரர்கள் அனைவரினதும் சேவைகள் முழுநேர சேவையாகப் பிரகடனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவர்களை இராணுவ முகாம்களுக்கு வந்து சேருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# வடக்கில் 15,000 பேர் இன்று வேலைநிறுத்தத்தில் குதிப்பர்!

## தொழிற்சங்க கூட்டுக்குழுவின் முயற்சிக்கு பலரும் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப்பிரதேசங்களில் உருவாகியுள்ள அராஜக நிலைகளைக் கண்டித்தும், வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு ஜனாதிபதிக்கு விடுத்தசில கோரிக்கைகளுக்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாததை கண்டித்தும் 14 தொழிற்சங்கங்கள் இன்று காலை 10 மணி முதல் 11 மணிவரை வேலை நிறுத்தத்தில் குதிக்கின்றன!

இன்று நடைபெறும் இந்த ஒரு மணிநேர வேலைநிறுத்தத்தில் 14 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சுமார் 15,000 பேர் பங்குபற்றுவார்கள் என 'வட பிரதேச தொழிற்சங்க கூட்டு குழுவினர் தெரிவித்தனர்

இந்த வேலைநிறுத்தத்திற்கு வடபகுதியில் மேலும் பல தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

வர்த்தகர்கள் சார்பில் திரு. கணேசன் நேற்றுமுன்தினம் வடபிரதேச தொழிற்சங்க கூட்டுகுழுவினரை சந்தித்து ஆதரவு தெரிவித்தார்.

ஹோட்டல் பேக்கரி மற்றும் சாய்ப்பு குடிவகை ஊழியர் சங்கத்தினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இன்று நடைபெறும் வேலை நிறுத்தத்தில் ஆசிரியர்களுடன் பாடசாலை ஊழியர்களும் கலந்துகொள்வார்கள்

[6ம் பக்கம் பார்க்க]

### காங்கேசன் ரவல்ஸ்

காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கல்முனை
பாதைகளில்

### மீண்டும் பஸ் சேவை

23-3-85 சனிக்கிழமை தொடக்கம்
மீண்டும் எமது சேவையை
ஆரம்பிக்கிறோம் என்பதனை
வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறோம்.

புறப்படும் நேரம்:

| | | |
|---|---|---|
| காங்கேசன்துறை | — | காலை 5-30 |
| யாழ்ப்பாணம் | — | காலை 6-30 |
| கல்முனை | — | காலை 5-30 |
| மட்டக்களப்பு | — | காலை 6-45 |

ஆசனம் பதிவுசெய்யுமிடங்கள்;

★ காங்கேசன் ரவல்ஸ், காங்கேசன்துறை
★ ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ், நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
★ இராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், மட்டுநகர்
★ முருகன் ஸ்ரோர்ஸ், மட்டுநகர்
★ ராஜா ஸ்ரோர்ஸ், கல்முனை

காங்கேசன் ரவல்ஸ்
காங்கேசன்துறை. (2377)

## வங்கி ஊழியர் மீது கடும் நடவடிக்கை

(கொழும்பு)

மேலதிகநேரவேலையை செய்யமறுக்கும் வங்கி ஊழியர்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின்பின்னர் அரசின்முடிவை ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் தெரிவித்தார்,

நாற்பதுசதவீத சம்பளஉயர்வுக்கோரிக்கையை முன்வைத்து வங்கி ஊழியர்கள் மேலதிகநேரவேலை செய்வதில்லை என நேற்றிலிருந்து தீர்மானித்துள்ளனர்.

## கொழும்பு 'அவுட்'

(யாழ்ப்பாணம்)

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையேயான தொலைபேசித் தொடர்பு நேற்று முழுநாளும் துண்டிக்கப்பட்டிருந்தது.

## ஓய்வூதியம்: திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் மக்கள் வங்கியில் இன்று (வியாழக்கிழமை) ஓய்வூதியம் பெறவுள்ளவர்களுக்கு இம்மாதம் 25-ம் திகதி தொடக்கம் 28-ம் திகதிவரை வழங்கப்படுமென்று தபால் அதிபர் தெரிவித்துள்ளார்.

அளவெட்டி (25-ம் திகதி), புங்குடுதீவு (26-ம் திகதி, வசாவிளான் (27-ம் திகதி), வட்டுக்கோட்டை (28-ம் திகதி ) (மா)

## ஈரான்—ஈராக்கிற்கு ரஜீவின் விசேட தூதுவர்

(புதுடில்லி)

உக்கிரமடைந்துள்ள ஈரான்-ஈராக் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகளில் இரு நாட்டுத் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக இந்திய வெளியுறவு இணையமைச்சர் திரு. குர்ஷித் ஆலம் கான்

(6ம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட வர்த்தகர்கள் விவகாரம்: வர்த்தகர்கள் சங்கம் 25ம் திகதிவரை காலக்கெடு!

(யாழ்ப்பாணம்)

"எமது சகோதர வர்த்தகர்களை விடுதலைசெய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மிகவும் பணிவுடன் வேண்டுகின்றோம் எமது கோரிக்கையை ஏற்று அவர்கள் விடுதலைசெய்யப்படாவிட்டால்; இம்மாதம் 25ம் தேதி முதல் யாழ். மாநகர வர்த்தகர்கள் யாவரும், எவ்வித பேதமின்றி பணயம் வைக்கப்பட்டிருக்கும், வர்த்தகர்களை விடுவிக்கும் வரை கடைகளைப் பூட்டி தங்கள் பலமான எதிர்ப்பை தெரிவித்து கொள்வார்கள்"

யாழ்ப்பாண மாநகர வர்த்தகர்கள் சங்கம், நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது:

[6ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களினுல் கல் அரித்து தயாரிக்கப்படுபவை வர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

சிங்கர் குளிர்சாதனப்பெட்டி, C.90 கொண்டா மோட்டார் சைக்கிள், ஓட்டுமடம், ஆலடிச் சந்திக்கு அருகாமையில் றேட்டுக்கரையில் 10 பரப்பு நெற்காணி விற்பனைக்கு உண்டு. நியூ குகானந்த கபே, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம் 2353

எம்மிடம், குரங்குவால் பயத்தம் விதைகளும், மற்றும் மரக்கறி விதைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: துர்க்காஸ் ஸ்ரோர்ஸ், மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை. 2376

## தேவை

வயிண்டிங், வயறிங் வேலைகள் பழக விரும்புபவர்கள் நேரில் வரவும். ஒமேகா, 164, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2364

வீட்டு வேலை, வெளி வேலை செய்வதற்கு நடுத்தர வயதும் நல்ல பழக்க வழக்கம் உள்ள வேலையாள் தேவை. கார் லைசென்ஸ் வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது. உணவு, சம்பளம் பற்றிய விபரம் நேரில். இருவரது அறிமுகப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளப்பர இல. 2352 C/o ஈழநாடு லிமிடெட், யாழ்ப்பாணம். 2352

நல்ல நிலையிலுள்ளதும், நியாயமான விலையிலும் 26ஸ்ரீ அல்லது 27ஸ்ரீ ஒஸ்ரின் அல்லது மொறிஸ் ஐந்துதொன் லொறி தேவை. விபரங்களுக்கு: 249, Sri Saddharma Mawatha, கொழும்பு - 10. 2369

தொழிற்சாலை ஒன்றிற்கு சவர்க்காரம் செய்வதிலும், வெட்டுவதிலும் 3 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் உள்ள ஆட்கள் உடன்தேவை. தகுதியுடையோர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2372 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 2372

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

## வகுப்புகள்

108. Brown Road, Jaffna. 85 A/L அசேதன இரசாயனம், வினா,விடை வகுப்பு ஆரம்பம்: 23-03-85 சனி 2-00 p. m. சனி, ஞாயிறு - 2-00 p. m. - 4-00 p. m. ஆசிரியர்-சக்தீஸ் 2370

## INVESTMENT

Investors Wanted for new manufacturing concern. Unbeatable offer. Double your money in 2½ years - maximum initial Investment Rs. 15.000/- per person For free details apply Box 2358.C/o Eelanadu, Jaffna. 2358

## தவறிவிட்டது

அ. இராசலிங்கம் 160 நாவலர் றோட்டு என்னும் விலாசமுள்ள கார்ச்சாரதி லைசென்ஸ் 19-3 85 ல் நாவலர் றோட் சந்திக்கும், பலாலி றோட் நாவலர் றோட் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. மேற்படி புத்தகத்தைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 119, கஸ்தூரியார் வீதியில் உள்ள பொ. அம்பலவாணர் நகை மாளிகையில் ஒப்படைக்கவும். 2366

இராஜரட்ணம் இராஜகுமாரன் (இராஜகுமார்) இல. 16, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்பவருடைய 670371565V அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடனடியாக மேல்விலாசத்திற்கு அல்லது சிறிலங்கா புத்தகசாலையில் ஒப்படைக்கவும். 2362

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 18 - 3 - 85 ல் கந்தையா பாலசுப்பிரமணியத்தினது அடையாள அட்டை தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சென்சறி நகைமாளிகை, 165, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். 2365

கந்தையா திருச்செல்வம் மாவடிச்சந்தி வட்டுக்கோட்டை என்பவரது இல C L 8640 கார்புத்தகமும் மாற்றுப்பத்திரமும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானமும் வழங்கப்படும். 2363

## காணவில்லை

குமரகோட்டம் கோண்டாவிலில் வசிக்கும் ஐயாத்துரை-பரமேஸ்வரன் ஆகிய எனது அடையாள அட்டை தவறிவிட்டது இல 391050333 கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற் குறிப்பிட்டிருக்கும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2368

## வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, ஒல்லாந்து செல்வதற்கான சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ், ஜெர்மனி, செல்வதற்கான சிறந்த வசதிகளும்,
குறைந்த செலவில் காலதாமதமின்றி செய்துகொடுக்கப்படும்.

செவ்வாய் முதல் வெள்ளி வரை
PRASAD REST,
11 - Upatissa Road,
BAMBALAPITIYA. PHONE: 587855

சனி, ஞாயிறு, திங்கள்
வ. நல்லையா,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

[2331]

## மன்னர், வவுனியா மாவட்ட விதைபொருள் ஒப்பந்தக்காரர்களுக்கு

அன்புடையீர்,

எமது காரியாலயத்தில் கடந்த 84 / 85 காலபோகத்திற்கு விதைநெல், மற்றும் மேட்டு நிலப்பயிர் விதைகள் பெற்று ஓர் ஒப்பந்தக்காரர்களாகபதிவுசெய்யப்பட்ட தாங்கள் விளைவுசெய்த விதை பொருட்களை நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக எம்மால் மீண்டும் கொள்வனவுசெய்து விநியோகிக்க முடியவில்லை. ஆகவே தங்களால் ஒப்பந்த அடிப்படையில் உற்பத்திசெய்து விளைவிக்கப்பட்ட விதைநெல், மற்றும் விதைபொருட்களை உங்கள் பகுதி மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்) அல்லது உங்கள் பகுதி கமத்தொழில் போதனுசிரியரிடம் தொடர்புகொண்டு மற்றைய கமக்காரர்களுக்கு தங்களுடைய விதைநெல், மற்றும் விதை பொருட்களை வழங்கி அவர்களுடைய விதைநெல், மற்றும் விதைபொருட்கள் பற்றுக்குறையைநிவர்த்திசெய்யும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆர். கந்தையா
உதவி விவசாயப் பணிப்பாளர்
(பண்ணைகளும் நடுகைப் பொருட்களும்)
முருங்கன்

2374

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி/3859

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்தகாலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் பத்மநாதன் என்பவரின் மரண சாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

சிவசுப்பிரமணியம் பத்மநாதன் கைம்பெண் சந்திராதேவி, உரும்பராய் கிழக்கு, உரும்பராய்.

மனுதார்

1. அகாங்கனி பத்மநாதன்
2. பிரதீபன் பத்மநாதன்
பராயமற்றவர்கள்
3. சின்னக்குட்டி செல்லையா (பராயமற்ற 1-ம், 2-ம் எதிர்மனுதார்களின் வழக்குப் பாதுகாவலர்) எல்லோரும் உரும்பராய் கிழக்கு, உரும்பராய்.

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்டமரணசாதன வழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு சித்திரை மாதம் 26ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ம் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்

வரைவு

து பாக்கியநாதன்
மனுதாரின் சட்டத்தரணி
2359

## அறிவித்தல்
## Ceylinco Limited
## சிலிங்கோ லிமிட்டெட்

(யாழ். கிளை)
பிரதான ஏஜென்ட்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

எமது ஸ்தாபனம் இல. 249/c, மின்சார நிலைய வீதியிலுள்ள த பினன்ஸ் கொம்பனி லிமிட்டெட் 2-ம் மாடிக்கு மாற்றப்பட்டு வழமைபோல் சகல விதமான காப்புறுதி அலுவல்களும் நடைபெறுகின்றன என்பதை வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(2295)

## புதிய நிர்வாகத்தின் கீழ்
## வை. சி. சி. கு.
## சைவ ஹோட்டல்



இல. 195, (57),
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணத்தில்
நாளை வெள்ளிக்கிழமை
(22—3—1985)
காலை 6-20 மணி முதல் 7-20 மணி வரையுள்ள சுபவேளையில்
திரு. V.K. சபாரெத்தினம்
அவர்களால்
(முகாமையாளர்,
ஹோம்பினன்ஸ் லிமிட்டெட்)
ஆரம்பித்து வைக்கப்படும்
என்பதை மிக மகிழ்ச்சியுடன்
அன்பர்கள, ஆதரவாளர்கள் மற்றும்
அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**அம்பலவாணர் அன் சன்ஸ்**
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24291

(2351)

## முதலாவது சிராத்த தின அஞ்சலி



தோற்றம்:
1930-08-05

மறைவு:
1984-04-01

**திரு. சின்னத்தம்பி இராமசாமி**

அன்பின் வடிவமாய்பண்பின் உறைவிடமாய் அறிவின் சிகரமாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மைப் பிரிந்து ஓராண்டாகிறது.

கண்ணை இமை காப்பதுபோல எங்களைக் காப்பாற்றினீர்கள். எம்மையெல்லாம் வாழ வைத்த தெய்வமே, தம்மை ஒறுத்து எம்மைக் காத்த தெய்வமே அல்லும் பகலும் எமக்காக உழைத்தீர்கள். எம் ஆருயிரே குடும்ப முழுப்பொறுப்பையும் உங்கள் தலைமேல் வைத்துச் சுமந்தீர்கள எம் கண்ணின் மணியே நடுங்கிக் கலங்கவிட்டு ஏங்கித்தவிக்க விட்டுச் சென்று ஓராண்டு ஆகின்றதே உறவினர்களுக்கு உதவியாக இருந்தீர்கள். நண்பர்களுக்கு நல்லவராக நடந்தீர்கள். இத்தகைய சிறப்புவாய்ந்த இல்லத் தலைவராகிய உங்களைஇழந்துதவிக்கும் யாம் இன்றையமுதலாவது சிராத்ததினத்தில் ஆன்ம சாந்திக்காகப்பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
திருமதி த. இராமசாமி,
பிள்ளைகள்: சுகிர்தா, சுகிர்தரன்.
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.
21-03-85.

(2345)

## மணிவாக்கு

ஆடுபாம் பணிந் தம்பலத் தாடுவான்
பாடுவார் பவந்தீர்த்திடும் பண்பினன்
ஓடுகங்கை உடன் வைத்த சென்னியன்
நாடுமீழத்து நற்றமிழ் நாடனே.

—சிவயோகசுவாமிகள்

# நமது நோக்கு

## சிறீபாலி பொன்விழா

சுதந்திர பூமிக்கு வரைவிலக்கணம் வழங்கிய குருதேவர் ரவீந்திரநாத் தாகூர் தமக்குநோபல்பரிசுபெற்றுத் தந்த கீதாஞ்சலி என்னும் நூலில் இவ்வாறு பாடியிருக்கிறார்.

''நெஞ்சம் அச்சமின்றி நிற்குமிடம்; வார்த்தைகள் உண்மையென்னும் ஊற்றிலிருந்து பிறக்கும் இடம்; சோர்வு இல்லாத முயற்சியின் மூலம் தோள் நிமிர்ந்து நிற்கும் இடம்; சீர்கெட்ட வழக்கம் எனும் செஞ்சுரம் நீங்கி பாரினில் தெளிந்து சிந்தை பாய்ந்து, ஞானமாகிய நீரிலே நிறைந்த ஓடை மூலம் செல்லும் இடம்: மெய் விடுதலை பெற்ற நாடு அமரத்துவம் பெற்று அப்பனாக அம்மையாக மக்களை நாட்டுக்குச் சேவைசெய்யப் பணித்திடும் இடம்''.

கீதாஞ்சலியில் காணப்படும் இப்பிரபல கவிதையை தமிழில் மொழி பெயர்த்தவர் விபுலாநந்த அடிகள். மட்டக்களப்பில் அவர் நிறுவிய சிவானந்த வித்தியாலயம் தாகூரின் கல்விக் கருத்துக்கமைந்த தேசிய நிறுவனம். தாகூரின் தேசியத்திலும் கலைத் தொண்டிலும், உலகப் பொது நோக்கிலும் மோகம் கொண்ட இலங்கைப் பெரியார்கள் இருவரை நினைவு கூர்வது இன்று பொருத்தமாகிறது.

ஒருவர் யாழ்ப்பாணத்து தமிழர் தாகூரின் அந்தரங்க காரியதரிசியாக பல்லாண்டு பணிபுரிந்து, பின்னர் மகாத்மாகாந்தியின் வார்தா கல்வித் திட்டத்தின் பிரதம நிர்வாகியாகத் திகழ்ந்த பிரபல தேசியவாதி ஸ்ரீ அரியநாயகம், மற்றவர் இலங்கையின் பிரபல தேசியத் தலைவர் சிங்கள பெருமகன் வில்மட் பெரேரா அவர்கள்.

தாகூரின் சாந்திநிகேதனத்தில் படித்துப் பயிற்சி பெற்று, அவருடைய சிறந்த கல்விக் கோட்பாட்டில் அமைந்த ஒரு கலைக்கூடம் நிறுவியவர் வில்மட் பெரேரா. 1934ம் ஆண்டு மகாகவி தாகூர் இலங்கை வந்தபோது ஹொரணை என்னும் இடத்தில் 'சிறீபாலி' என்ற சிறந்த கலைக்கூடத்துக்கு தாகூர் அவர்களே அடிக்கல் நாட்டினர்,

சிங்கள தேசியத்துக்கும் நுண்கலைகளுக்கும் பிரத்தியேக பயிற்சி அளித்துவந்த சிறீபாலி. பாடசாலைகள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட போது அதுவும் ஒன்றாக அரசாங்க சிலப்பு நாடா நிர்வாகத்தில் அகப்பட்டது.

சிங்களப் பெருமகன் வில்மட் பெரேராவின் அரசியல் போக்கு அவர் மறைந்த காலத்திலேயே சிங்கள சமூகத்துக்கு பிடிப்பாக இருக்கவில்லை. பெருங் கவலை நிறைந்த உண்மைத் தேசியவாதியாகவே வில்மட் மறைந்தார்.

''தேசிய ஒற்றுமை'' என்ற கோட்பாட்டில் தூய நம்பிக்கையும் கொள்கை உறுதியும் கொண்டவர் வில்மட்.

தமது பெரும்பான்மை சமூகம் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் வழங்க முன்வர வேண்டுமென்றும், சிங்கள - தமிழ் கலாசாரம் ஒற்றுமைப் பட்டதென்றும் ஆங்கில நாகரிக தாக்கம் ஒழிய வேண்டுமென்றும் எவ்வித தயக்சமுமின்றி எந்த மேடையிலும் பேசி வந்தார். தமிழருடன் உண்டான நட்பை பகிரங்கமாகக் காட்டி வந்தார். யாழ்ப்பாணத்தின் உற்ற நண்பனாக வாழ்ந்தார்.

இந்தநாட்டில் தேசிய ஒற்றுமை மட்டுமல்ல, பரந்த தேசிய உணர்வே வேரூன்ற சுமுகமான சூழ்நிலை இல்லை என்பது அவருடைய ஆழ்க்கவலையாக இருந்தது. இன்று நிலை மோசமாகிறது வெளிப்படை.

இருப்பினும் அவர்தம்முடைய சொந்தச் செலவில் அமைத்த 'சிறீபாலி' ஒரு குட்டி 'சாந்தி' நிகேதனம் (அமைதியின் அடைக்கலம்) ஆக வளராவிட்டாலும் இன்று ஐம்பது ஆண்டு கல்விச்சேவை கண்டு பொன் விழாக் கொண்டாடுகிறது.

இவ்வைபவத்துக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டவர் இந்திய உயர் ஸ்தானிகர் திரு சத்வால். இந்திய-இலங்கை உறவின் வரலாற்றையும் மகாகவியின் உலக நோக்கையும் நன்றாக விரித்துரைத்திருக்கிறார் திரு. சத்வால்.

நாட்டின் பிரபல தினசரிகள் இதற்கு முக்கியத்துவம் அளிக்காததில் என்ன ஆச்சரியம்?

## தவக்காலத்தின்



## 31-ம் நாள்

''நீங்கள் அருளப்பரிடம் ஆள் அனுப்பினீர்கள் அவரும் உண்மைக்குச் சாட்சியம் கூறினார்.''

[அரு: 5 | 33]

உண்மைக்கு உயிர் கொடுக்கவும், அதை நிலைநிறுத்தவும் யேசு இவ்வுலகிற்கு வந்தார். உண்மை வழி உயிர் வழி, வாழ்வின் வழி அவரே. அந்த வழியில் நான் நடந்து அவராகவே மாற என்னை அழைக்கின்றார். அவர் பேசியதையும், செய்தவைகளையும் தந்தை நெறிப்படுத்தினார்—ஏற்றுக்கொண்டார். ஏனெனில் தந்தையினுடைய பிரதிபலிப்பாகவே கிறீஸ்து வந்தார். அவர் பணிக்கு ஊற்றாக இருப்பவரும் தந்தையே.

''மகன் தானாகவே ஒன்றும் செய்ய முடியாது. தந்தை செய்யக் காண்கின்றதையே செய்கின்றார்.

[அருள்: 5/19]

நான் எனது வாழ்வின் பொருளை ஊற்றாகிய கிறீஸ்துவிலே காணவேண்டும். அவர் என்னை நெறிப்படுத்த வேண்டும—பரிபாலிக்க வேண்டும். நான் அவராக மாற வேண்டும். எனது இயக்கங்களுக்கெல்லாம் மூலாதாரம் அவராகவே இருக்க வேண்டும் நானும் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அவரை விட்டால் நான் ஒன்றுமில்லை என்பதை உணர்வேனாக. எனது வாழ்வு முழுவதையும் அவரிலே ஆரம்பப்பேனாக.

''என்னைப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய முடியாது.''

அருட் திரு ம. போல் நட்சத்திரம் அ. ம. தி.

# இனியும் அரசியல் ஆதிக்க போட்டிக்கு இடமில்லை

தமிழகம் சென்ற அமைச்சர் தொண்டமான் அங்கு தாம் பார்த்த, கேட்ட சங்கதிகள் மிக ஆபத்தானதொரு கட்டத்தை அடைந்திருப்பதை நன்குணர்ந்த பினனரும் ''நமக்கென்ன நான் தனிப் பட்டமுறையில் தானே தமிழ் நாட்டுக்கு வந்தேன்'' என்று சும்மா இருந்துவிடமுடியுமா?

தமிழகத்தில் ஈழத்திலிருந்து தமிழர்கள் அகதிகளாகவந்து கொண்டிருக்கிறார்கள். ஈழத்தில் தமிழர்கள்படும் இன்னல்கள் பற்றிய செய்திகளைக் கேட்டு தமிழகத்தில் மாணவர்கள் முதல் பெரியோர் வரை குமுறி எழுகிறார்கள்.

தமிழக மீனவாகள் தமது கடற்பிராந்தியத்திலேயே தமது தொழிலைச்செய்யமுடியவில்லையென்றும் தமக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்றும் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச்செய்ய வேண்டுமென்று தமிழகத்தில் குரல் எழுந்துள்ளது.

தமிழகத்தில் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை வெறும் வேடிக்கையல்ல. நிலைமை நீடித்தால் விபரீதமானவிளைவு ஏற்படுமென்பதைப் பொறுப்புள்ள ஓர் அமைச்சர் உணர்ந்துகொண்டதால்தான் உடனடியாக நாடு திரும்பி ஜனதிபதியைச் தனிமையில் சநதித்து நிலைமையை எடுத்துக் கூறினார்.

''எத்தனை ஆக்கிரமிப்பையும் சமாளிக்கத் தயார்; கடைசிச் சிங்களவன் இருக்கும் வரை எமதுநாடு யாருக்கும் அடிமையாக மாட்டாது'' என்று மேடைகளில் முழங்கலாம். பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்து மக்களுக்கு உணர்ச்சியூட்டலாம்.

இது அடுத்த தேர்தலையும் அதிகார பீடத்தில் அமர்வதற்கான அரசியல்வேட்கையையும் கொண்ட அரசியல்வாதிகளின் செயலும் தொழிலுமாகும்.

தொண்டமானின் விருப்பப்படியோ, அமிர்தலிங்கத்தின் ஆசைப்படியோ இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண முடியாது என்று பொறுப்பு வாய்ந்த அஸ்கிரிய பௌத்த மத பீடாதிபதி சமீபத்தில் தெரிவித்திருந்தாலும் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு உடனடியாக இனப்பிரச்னைக்கு அமைதித் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அமைச்சர் தொண்டமான் தமது கடமையைச் சரியான முறையில் அணுகியிருக்கிறார்.

### நம்பிக்கையில்லா பிரேரணை

திரு. அமிர்தலிங்கம் எதிர் கட்சித்தலைவராக இருந்த போது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்ததும் அந்தப்பிரேரணை மீது நடந்த விவாதத்தில் கடைந்த வகுப்புவாத விஷம் பின்னர் நாடு முழுவதும் எப்படி 'விஷவாயுவை' பரப்பி உலகமே நமது தர்மதுவீபத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வைத்ததென்பதையும் இன்னும் அறியாதார் உண்டா?

## எஸ். எம். ஜீ.

இப்பொழுது அமைச்சர் தொண்டமானுக்கு எதிராக அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு மஹரகம எம் பி. யும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான திரு. தினேஷ் குணவர்த்தன முன் வந்துள்ளார். ஒரு காலத்தில் இலங்கையில் மார்க்ஸியத்தின் தந்தையென கருதப்பட்ட, பின்னர் பதவிக்குவருவதற்கு வகுப்புவாதமே ஒரே வழி என்று பண்டாரநாயக்காவுடன் சேர்ந்து 1956 ஆம் ஆண்டில் எம். ஈ பி. அரசில் அமைச்சராக சில ஆண்டு காலம் பதவி வகித்த திரு. பிலிப்குணவர்த்தனவின் புதல்வரான தினேஷ் குணவர்த்தனவின் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முயற்சிக்கு இலங்கைக் கம்யூனிஸ் கட்சியைத்தவிரமற்றும் எதிர்க் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளனவாம்.

### காலம் கடந்த ஞானோதயம்

''இலங்கையின் இனப் பிரச்னையை இந்தியாவின் உதவியின்றி ஜெயவர்த்தன அரசினால் ஒருபோதும் தீர்க்க முடியாது'' என்று முன்னாள் பிரதமரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமாவேபண்டாரநாயக்க சொல்லிவருகிறார்.

ஜெயவர்த்தன அரசினால் தீர்சகமுடியாதுஎன்றால், தான் மீண்டும் ஆட்சிககு வந்தால் தீர்த்துவைக்க முடியும் என்பது அம்மையாரின் பேச்சின் அர்த்தம்.

இன்றைய பிரச்னைகளுக்கு ஜெயவர்த்தனஅரசேதான்காரணம் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவது வழமையான அடுத்ததேர்தலை எதிர் பார்க்கும் அரசியல் பிரசாரம்

தமிழர்களையும் கைக்குள் போட்டுச் சுதந்திரம் பெற்ற டி எஸ். சேனநாயக்க சிலவிஷயங்களில் தமிழர்களின் சில ஜனநாயகக் கோரிக்கைக்கு வெளிப்படையாக மதிப்பளித்தார். தேசியக் கொடியாகச் சிங்கக்கொடியை ஏற்றுக் கொண்டபோது அதில் சிறுபான்மையினருக்கு இடமளிக்கப்படவில்லை என ஆட்சேபித்த அடங்காத்தமிழன் ஸி. சுந்தரலிங்கம் இப்பிரச்னையில்எம்.பி. பதவியை ராஜினமாச் செய்து மீண்டும் உபதேர்தலில் வெற்றியீட்டிவந்து வாதாடியதையும், மற்றும் தமிழர்களின் கோரிக்கையையும் ஏற்றுத் தேசிய கொடியில் சில திருத்தங்கள் செய்து இரு கோடுகளையாவது இணைத்தார்.

ஆனல் 1956ம் ஆண்டு பதவிக்கு வந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவும் சரி அதன் பின் பதவிக்கு வந்த திருமதி சிறிமா பண்டாரநாயகா அரசும் சரி அதன்பின் ஆட்சிக்கு மாறி மாறி வந்தவர்களும்சரி வடக்கு மாகாணத்திலுள்ள தமிழ்பேசும் மக்களின் தீர்ப்பை மக்கள் தீர்ப்பாகவே ஏற்றுக்கொள்ளவில்லை.

### யார்மீதுபழி போட்டும் பயனில்லை

இன்றைய மோசமான நிலைக்கு இதுவரை ஆட்சி பீடத்திலமர்ந்தவர்கள் அனைவருமே பொறுப்பேற்க வேண்டு .

இதில் வேடிக்கை யென்னவென்றால் இன்றும் பிரச்னைக்கு யார் மீது பழிபோட்டு மீண்டும் ஆட்சி அதிகாரப்போட்டியிலீடுபடுவதற்குத் தயாராகிறார்களே யொழிய ஒரு அமைதியான நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இன்னும் அவர்கள் தயாராக இல்லை.

தமிழ் மக்கள் எப்படிப் போனலென்ன என்பதில் அவர்களுக்குள் என்றுமே ஒற்றுமை உண்டு. தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதில் தான் அவர்களுக்குள் போட்டி.

### இனியும் தாமதமாகாது

1970-ம் ஆண்டில் ஆட்சிக்கு வந்து புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் பொறுப்பையும் பெற்றிருந்த டாக்டர் கொல்வினுக்குஅன்று வராத ஞானேதயம் காலம் கடந்து இன்றுதான் வந்துள்ளது. பிரதேச சுயாட்சிதான் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குள்ள ஒரேவழி என்கிறார்.

சிறிமா அம்மையாரை இங்கு வந்த திரு. பார்த்தசாரதி சந்தித்துப் பேசியும் பிரச்னையைத் தீர்க்க சர்வகட்சி மகாநாட்டில் தொடர்ந்தும் தமது கட்சியின் ஒத்துழைப்புக் கொடுக்க முன்வரவில்லை. இன்றும்கூட பண்டா-செல்வா ஒப்பந்த அடிப்படையில் கூட பிரதேச சுயாட்சி வழங்கிப் பிரச்னையைத் தீர்க்கலாமென்று யோசனை சொல்ல முன்வரவில்லை.

முக்கிய கட்சிகள் பிரதேச சுயட்சியை ஆதரிப்பதால் சிங்களக் கட்சிகளையும் சிங்கள அமைப்புக்களையும் முதலில் ஜனதிபதி அழைத்து நிலைமையைஎடுத்துக்கூறிவிட்டு, தமது நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டு பிரதேச சுயாட்சி அமைப்பை ஏற்படுத்தமுன் வருவதும் அதன்பின் இராணுவத்தை வாபஸ் பெறவும் தீவிரவாதிகளை வன்செயலை நிறுத்தக்கோரி அவர்களுடன் பேச்சு நடத்துவதுமே பிரச்னைக்குத்தீர்வுகாண்பதற்குள்ள சரியான அணுகுமுறையாக அமையுமென்று சொல்லலாம்.

அகதிகளுக்கு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இவ்வருடம் தமது வருடாந்த விழாவை ரத்துச் செய்துள்ளது.

இவ்வருடம் இவ்விழாவுக்கு செலவிடவிருந்த பணம் அனைத்தையும் அகதிகள் நிவாரணத்துக்கு அளிப்பதெனவும் முடிவு செய்துள்ளதாக, மேற்படிச் சங்கத்தின் காரியதரிசி திரு. ஜி. ராஜசிங்கம் தெரிவித்தார். (வி)

# தொழிற்சங்கக் கூட்டுக்குழு

## ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம்

(யாழ்ப்பாணம்)

''எமது கடிதத்தின்மூலம் தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 5 கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்தினுல் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதில் எமது அதிருப்தியை தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

13 தொழிற்சங்கங்கள் அடங்கிய வட பிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு, ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுக்கு இம்மாதம் 10-ம் திகதி அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:.

1985 பெப்ரவரி 10-ம் திகதி எமது கடிதத்தில் சுட்டிக்காட்டியதுபோன்று கொலையுண்ட, ஊனமுற்ற தொழிலாளர்கள் தொடர்பாக நஷ்டஈடு வழங்குவதற்கு இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதிலும் எமது அமைப்புகள் தமது முற்றுமுழுதான அதிருப்தியை தெரிவிததுக் கொள்ளுகின்றன.

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள தொழிலாளர்கள் மீதும், மற்றும் பொதுமக்கள் மீதும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள்மீதும் அடையாள எதிர்பைத் தெரிவிக்குமுகமாகவும் எமது 1984 டிசம்பர் 23, 28 ம் திகதி கடிதமூலம் எமது அமைப்புக்களினுல் சமர்பிக்கப்பட்ட 5 கோரிக்கைகளைத் தொடர்ந்தும் வலியுறுத்துவதற்காகவும்,1985 மார்ச் 21-ம் திகதியன்று குறைந்தபட்சம் ஒருமணிநேர வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதென எமது அமைப்புகளின் அங்கத்தவர்களினுல் தீர்மானிக்கப்பட்டுள்ளமையைத் தங்களுக்கு இத்தால் அறிவிக்கிறேம். (க)

---

## திருமணப்பதிவின் பின்னர்

# கல்யாணம் நடக்கவில்லை; இளம்பெண் தற்கொலை

[யாழ்ப்பாணம்]

நீதிமன்றத்தில் அடுத்த வாரம் விவாகரத்து வழக்கு ஒன்றை எதிர்நோக்கியுள்ள நல்லூரைச்சேர்ந்த இளம் பெண் ஒருவர் நஞ்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினுர்.

இறந்தவருக்கு 2 வருடங்களுக்கு முன் திருமணப்பதிவு நடந்ததாகவும், அதற்கு சில மாதக்களுக்குப்பின் மனநோய் ஏற்பட்டு தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றதாகவும், இதன்பின் மணமகன் திருமணம்செய்ய மறுத்துவிட்டதாகவும், இதனுல் அப்பெண் கவலையடைந்திருந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் இருதரப்பினரும், சுமுகமானமுறையில் விவாகரத்து செய்ய முன்வந்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கலானதாகவும், அடுத்தவாரம் விசாரணை நடைபெறவிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவதினம் காலையில் தாயார் தேநீர் குடிக்கும்படி இறந்தவரைக் கேட்டபோது அவர் சாப்பிடப்போவதாகக் கூறி அறைக்குள் சென்று சிறிது நேரத்தில் போத்தல் விழுந்த சத்தம்கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் கட்டிலில் விழுந்து துடிதுடித்ததாகவும், அருகில் நஞ்சுத்திராவக போத்தல் கிடந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. தற்கொலைஎனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. (க)

---

# 8 பிள்ளைகளின் தந்தை ஏற்பு வலிக்கு பலி!

(யாழ்ப்பாணம்)

எட்டுப் பிள்ளைகளுக்குத் தந்தையான ஒரு தொழிலாளி புதிதாகக் கட்டப்பட்ட 6 அடி மலகூட குளிக்குள் விழுந்ததால் ஏற்பட்ட காயத்தினுல் உருவான ஏற்புக்குப் பலியானுர்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த 59 வயதான நாகமணி கந்தசாமி என்பவரே பலியானவராவர்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க.கேசவன் மரணவிசாரணை நடத்தினுர். இம்மாதம் 8 ம் திகதி வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த இவர் குளிக்குள் தவறி விழுந்ததால் கண்ணருகே காயம் ஏற்பட்டதாகவும், தனிப்பட்ட டாக்டர் ஒருவரிடம் காட்டிய போது அவர் தையல் போட்டபின் ஏற்புஊசி போடமுன் வந்தபோது ஏற்கனவே ஏற்பு ஊசி போட்டதாகத் தெரிவிக்கவே, ஊசி போடவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது

இம்மாதம் 17 திகதி கழுத்தை திருப்ப முடியாமலும், வாயைத் திறக்கமுடியாமலும் போனதால், அதே டாக்டரிடம் சென்றபோது அவர் ஏற்பு எனக்கூறி யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்ததாகவும், தெரிவிக்கப்பட்டது. ஆஸ்பத்திரியில் மரணமானுர் ஏற்புவலியால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிககப்பட்டது. (க)

---

## மனமுடைந்து தற்கொலை

(யாழ்ப்பாணம்)

தமது விருப்பத்திற்கு மாருக பேரன் காதலித்து திருமணம் செய்ததினுல் மனமுடைந்திருந்த பேத்தி நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலைசெய்து கொண்டார்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த ஏ. அன்னலட்சுமியின் (58 வயது) மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரிய வந்தது.

யாழ். மரண விசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினுர்.

இறந்தவர் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த போது பேரன் வேலை செய்ய வேண்டாம் எனக் கூறியதாகவும் இதனுல் அவர் நச்சுத்திராவகம் அருந்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது

---

## யாழ். மாவட்டத்தில்

# சோபையிழந்த பாடசால[ை] போ[...]

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே வருடாந்தம் நடாத்தப்படும் கிரிக்கெட் போட்டிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன. ஆனுல் இப் போட்டிகள் கடந்த வருடங்களைப்போல் உற்சாகம் கூடிய போட்டிகளாகக் காணப்படவில்லை. எநதக் கோஷ்டிகளிடமும் கடந்த காலங்களைப் போல், சிறந்த துடுப்பாட்டத்தையும், சிறந்த பந்து வீச்சையும், சிறந்த பந்து தடுப்பையும் காணக்கூடியதாக இல்லை.

இவைதவிர, இப்போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகிக்கும் மத்தியஸ்தர்களும் தமக்குரிய உடைகளை அணியாது மத்தியஸ்தம் வகிப்பதைப் பார்க்கும்போது, பார்வையாளர்களுக்கே சற்று அருவருப்பை உண்டாக்குகின்றது.

தற்போது, யாழ். மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய கல்லூரிகளே இவ் வருடம் கிரிகெட் கோஷ்டிகளை உருவாக்கியுள்ளன.

### வெற்றி-தோல்வி இல்லை

யாழ். மத்திய கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி எத்தரப்பினருக்கும் வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 152 ஓட்டங்களைப் பெற்றது. நிரஞ்சன் ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களைப் பெற்ருர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 92 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ். மத்திய கல்லூரி 2-வது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 104 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டன. யாழ்ப்பாணக் கல்லூரி இப்போட்டி முடிவடைந்த போது 2-வது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### இவ்வா[ர] போட்டிக[ள்]

சனிக்கிழமை காலை [...] மணிக்கு ஆரம்பமாகு[ம்] [...] படுத்தப்பட்ட ஓவர்க[...] கொண்ட கிரிக்கெட் [...]டியில், யாழ்ப்பாணம் [...] பற்றிக்ஸ் கல்லூரி, வ[ட்டுக்] கோட்டையாழ்ப்பாண[க் கல்] லூரியை எதிர்த்து வி[ளையா]டும். இப்போட்டி சென்[ற் பற்]றிக்ஸ் கல்லூரி மைதான[த்தில்]

---

## அமரர் கே. சி. நடராஜா

உயர்ந்த பண்பாலும், உள்ளத் தூய்மையாலும் தன்னுடன் சேர்ந்து பழகுபவர்களின் உள்ளங்களைக் கவர்ந்து கொணட அமரர் கே. சி. நடராசாவின் நிரந்தரமான உறக்கம் அந்த உள்ளங்களையெல்லாம் நெகிழவைத்து விட்டது.

வடமராட்சி மணியம் கேற் முதலியார் அமரர் கந்தப்பு சின்னத்தம்பிக்கு தில்லைச் சிதம்பரத்தானின் அருட் பார்வையில் 19-6-1917 ம் திகதியன்று இவர் பிறந்தார். கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயத்தில் அரிவரி கற்று, அதே ஊரில் உள்ள தன் அப்பாவின் முகாமையிலுள்ள விக்னேஸ்வரக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்ருர்.

பின்பு கொழும்பு புனித. ஜோசேப் கல்லூரியில் கற்ற பின் இஙசிலாந்து சென்ற கே. சி. நடராசா பி. ஏ. பட்டமும் கேம்பிரிஜ்ஜில் எம். ஏ. பட்டமும், 'இன்னர் ரெம்பிளில் பரிஸ்டர் பட்டமும் பெற்ருர்.

கே. சி. நடராசா பிரபல சட்டத்தரணியாகத் திகழ்ந்து. இங்குள்ள பல அரச தூதர்களின் பிரியநேசராகவும் விளங்கினுர். சாம்பியா நாட்டின் அரச ஆலோசகராக அமர்ந்து அரசியல் திட்டம் தீட்ட அருந்துணை புரிந்தார். அவரது மதிநுட்பத்தை உணர்ந்த ஜமெய்க்கா அரசு அந்நாட்டு உயர் நீதிமன்ற நீதிபதியாக அவரை நியமித்தது.

வெளியூர் வாசனை இருந்தும், உள்ளூரில் தான் முன்பு கற்ற கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியின் முகாமையைத் தந்தையிடமிருந்து ஏற்று, ''தந்தையிலும் மைந்தன் சதமடங்கு'' என்ற வாசகத்துக்கு இலக்கணமானுர். ''நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ் கன்றும் கனி உதவும்'' என்ற உவமானத்தின் உவமேயமானுர். கல்லூரியின் பல கட்டிடங்கள், விளையாட்டு மைதானம், குடிநீர் வசதி என்பவை கே. சி. யின் காலத்திலேயே கிடைத்தன.

குடிநீர் வசதி தந்து குழந்தைகளின் தாகம் தணித்ததோடு நில்லாமல், தந்தையார் தாபித்த சந்நிதிவேலன் மடத்திலே ஆண்டுதோறும் பக்தர்களின் அரும்பசி தீர்த்த அந்தச் செம்மல் நோயில் அழுந்தாமல், பாயில் படுக்காமல், உண்டு உறங்கையிலே மாண்டு மறைந்ததுவே! ஆற்றேம் அரும் பிரிவு!! ஆண்டவனே!

ஐ சி

---

லங்கெம் விவசாய இரசாயனங்கள் நீண் காலமாக விலைக்கும், செயற்திறனுக்கும் முதலிடம் பெற்றவை.

அவை இலங்கை விவசாயிகள் அபரி[மித] அறுவடை பெற உதவுகின்றன. சமீபகா[ல]மாக பெருகிவரும் இரசாயனத் தயாரிப்பு[க்]களிலிருந்து எமது தயாரிப்புகளை இனங்[...]

காண்ப[...] கருதுகி[...] களின் [...] அவற்றி[...] திகழ [...] தோற்ற[...] நேரத்தி[...]

# லங்கெ[...] புதுத்தோற்[...]

மொனேகுரேட்டபொாஸ் பெயரிலும் தோற்றத்திலுமாறுபட்டுள்ள[...] அதன் தரமும் செயற்பாடும் அசல் அசோட்ரின் 60 தானென்பதை மற[...] லங்கெம் விவசாய இரசாயனங்களின் சில பெயர்களும் சகல லேபில்க[...] மாற்றப்பட்டுப் புதுத்தோற்றம் பெற்றுள்ள போதிலும்[...]த்தில் மாற்ற[...]

| புதிய பெயர் | பழைய பெய[ர்] |
|---|---|
| டியல்றின் 20. | டியல்ட்ரெக் 20 |
| லங்கெம் M-50 | கனோநாசினி 50 |
| அல்ட்றின் 20. | அல்ட்ரெக்ஸ்25 |
| மெதாமிடோபொஸ் 60 | மெதாமிடேபொாஸ் LC 60 |
| மொனேகுரேட்டபொாஸ் 60% | அசோட்ரின் |
| லங்கெம் பரகுவாட் | பரகுவாட் |
| லங்கெம் சினெப் | சினெப் |
| கொலர் புரடெக்டன்ட் | ஷெல் கொ[லர்] புரடெக்டன்[ட்] |
| TB 192 பனல் டிரெஸ்ஸிங் | ஷெல் TB 1[92] |
| லங்கெம் DD | ஷெல் DD |
| செர்பக்டன்ட் N | அக்ரிக[ல்]சர் ர்பக்டன்ட் N |
| லங்கெம் ப்ஃளவரிங் ஹார்மோன் | ஷெல் [...]டோ P |
| லங்கெம் சல்பர் | டிஸ்டேர்சிபிசல்பர் |

நாடெங்குமுள்ள லங்கெம் வியாபாரிகளும் விரைவி[...]

லங்கெம் சிலோன் லிமிட்டெட், 760, 762. பேஸ்லைன் வீதி கொழும்பு - 9.

# ..சாலே கிரிக்கெட் போட்டிகள்

..னத்தில் நடைபெற

### ..வாரப் போட்டிகள்

..க்கிழமை காலே 8-30 ..க்கு ஆ ம்பமாகு மட்டுப் ..தப்பட்ட ஓவர்களைக் ..ண்ட கிரிக்கெட் போட் .., யாழ்ப்பாணம் சென். ..க்ஸ் கல்லூரி, வட்டுக் ..ட்டை யாழ்ப்பாணக் கல் ..யை எதிர்த்து விளையா.. இப்போட்டி சென். பற் .. கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

நாளை ஆரம்பமாகும் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து விளையாடும். இப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டி நாளையும், நாளை மறுதினமும் பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5-20 வரை நடைபெறும்.

(வி)

## ஸ்ரீலங்கா தபால், தந்தி தொழிலாளர் சங்கமும் ஆதரவு

[சுண்டிக்குளி]

இன்று யாழ்ப்பாணத்தில் நடக்கும் ஒருமணி நேர வேலை நிறுத்தத்தில் தொழிற்சங்க வேறுபாடுகளை மறந்து தமது சங்கமும் பங்குபற்றுவதற்கு தீர்மானித்திருப்பதாக ஸ்ரீலங்கா தபால் தந்தி தொழிலாளர் சங்கத் தலைவர் திரு துஹதாசன் தெரிவித்தார்.

புங்குடுதீவு, அளவெட்டி வசாவிளான் வட்டுக்கோட்டை, ஆகிய தபால் நிலையங்களுக்கான ஒய்வூதியம் இன்று வழங்கப்படவிருந்ததாகவும், இவ் வேலை நிறுத்தத்தை யொட்டி இது இன்று வழங்கப்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

## வாகனம் கிடைத்தது

(பண்டத்தரிப்பு)

அண்மையில் இனந்தெரியாதவர்களினல் கடத்திச்செல்லப்பட்ட யாழ். பிரதேச சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான வெள்ளைநிற மோட்டார் வாகனம் கோப்பாய் சந்திக்கருகாமையில் கைவிடப்பட்டநிலையில் நேற்றுக்காலை காணப்பட்டது. இந்த வாகனம் மீட்கப்பட்டு யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்குக் கொண்டு வரப்பட்டது, இந்த வாகனம் மீண்டும் கிடைத்தது பற்றி யாழ். சுகாதார திணைக்கள உயரதிகாரி ஒருவர் மகிழ்ச்சி தெரிவித்தார். கடத்திச்செல்லப்பட்ட ஏனைய வாகனங்களையும் திரும்பவும் ஒப்படைக்குமாறும் இதன் மூலம் பாதிக்ப்பட்ட சுகாதார சேவைகளை மீண்டும் நடத்தக்கூடியதாக இருக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

## இடிவிழுந்து கோழி, மாடுகள் பலி!

(வண்ணார்பண்ணை)

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு திடீரெனப் பெய்தமழையுடன் வந்த மின்னலுடனான இடியொன்று நிலத்தைநோக்கி வீழ்ந்ததில் கோழிகளும், மாடுகளும் பலியாகியுள்ளன.

இச்சம்பவம் மண்டைதீவு 6ம் வட்டாரத்தில் நடந்துள்ளது.

## புங்குடுதீவு சிவன்கோவில் கொடியேற்றம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு பெருங்காடு ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரி சுவாமி கோவில் கொடியேற்றம் வரும் 26-ம் திகதி பகல் பதினொரு மணிக்கு நடைபெறவுள்ளது. 9-ம் திருவிழா அன்று இரதோற்சவம் நடைபெறும்.


..நீண்ட ..கும்

..பரிமித ..பிகால ..ப்பு ..னங்

காண்பது இலகுவாகவேண்டும் என நாம் கருதுகிறோம். எனவேதான் எமது தயாரிப்புகளின் செயற்பாட்டுத்திறன் போலவே அவற்றின் லேபில்களும் தனித்துவமாகத் திகழ வேண்டுமென எண்ணி தனித்துவ தோற்றம் வழங்கியுள்ளோம். சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவு இது! ஏனெனில் இப்போது லங்கெம் 100% இலங்கையருக்கே உரித்தான பொதுக் கம்பனியாகியிருக்கிறது. ஆம் அது உங்கள் கம்பனி!

LANKEM
லங்கெம் லங்கெம

..ம்,
..தாற்றம்.

..திலும் மாறுபட்டுள்ள போதிலும்
.. தான் என்பதை மறவாதீர்கள்.
..களும், சகல லேபில்களும்
..லும் தரத்தில் மாற்றமேதுமில்லை!

..பெயர்
..ரெக்ஸ் 20
..சினி M-50
..ரக்ஸ் 25
..டோபொஸ் LC 60%
..ரின் 60
..ட்

..காலர் புரடெக்டன்ட்
..B 192
..D
..சர் சேர்பக்டன்ட் N
..டோன் P
..சிபிள் சல்பர்




விலை ரூ. 34 முதல்

..களிடம் விரைவில் கிடைக்கும்.

# லங்கெம். விவசாயிகளின் தோழன்.

..வீதி - கொழும்பு - 9. தொலைபேசி: 598292-6

HTL LK 1893

ஈரான்—ஈராக்

# யுத்த நிறுத்த முயற்சியில் குவைத் துணைப்பிரதமர்

தெஹ்ரான், மார்ச் 20

**ஈரான்-ஈராக் போரை நிறுத்தச்செய்யும் புதிய முயற்சியில் ஈடுபடும் பொருட்டு தெஹ்ரானுக்கு விஜயம்செய்யும்படி குவைத் துணைப்பிரதம மந்திரி ஷேக் சபா அல்அகமட் அல்சபாவை வளைகுடா ஒத்துழைப்புச் சபை பணித்துள்ளது.**

ரியாத்தில் மூன்றுநாள் மகாநாட்டை முடித்துக்கொண்ட வளைகுடா ஒத்துழைப்புச் சபையின் வெளியுறவு மந்திரிகள் ஈராக், ஈரான் போரை முடிவுக்குக்கொண்டுவரும் புதிய முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இதற்கு முன்னேற்பாடாகவே குவைத் துணைப் பிரதம மந்திரியை இரு நாடுகளுக்கும் செல்வதற்காக நியமித்துள்ளனர்.

இந்தச் சபையைச் சேர்ந்த பல வெளியுறவு மந்திரிகள் போரை முடிவுக்குக் கொண்டுவரும்படி இரு நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இரு நாடுகளிலுமுள்ள அநேக வெளிநாட்டவர்கள் விஷேச விமானங்கள்மூலம் வெளியேறியுள்ளனர்.

நெருக்கடி கூடிக்கொண்டு செல்வதாலும், ஈராக் எச்சரிக்கை மற்றும் ஈரான் பதில் எச்சரிக்கையையும் கருதியே இவர்கள் வெளியேறியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, ஈரானிய அதிபரின் விசேஷ தூதுவர் அலிமொகமட் பிரசாத்தி புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தியைச் சந்தித்து, ஈராக் - ஈரான் போர் அதகரிப்பது குறித்து ஈரான் அதிபரின் செய்தியொன்றைச் சமர்ப்பித்தார்.

இவ்விசேஷ தூதுவர் இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரமேஷ் பண்டாரியையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். (து)

## சீதனக் கொடுமையை எதிர்த்து ஊர்வலம்

சென்னை, மார்ச் 20

சீதனக் கொடுமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்முகமாக இந்திய தேசிய மகளிர் சம்மேளனத்தைச் சேர்ந்த சுமார் இருநூறு பெண்கள் சென்னையில் சீதன எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்திற்கு ஊர்வலமாகச் சென்ற இப்பெண்கள், மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சிறினிவாசனைச் சந்தித்து, இது தொடர்பாக மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர். [து]

பங்களாதேஷில்

## அரச அலுவலகங்களை மூடும்படி உத்தரவு

டாக்கா, மார்ச் 20

பங்களாதேஷ் அதிபர் ஜெனரல் எர்ஷாத் தொடர்ந்து பதவியில் இருப்பதற்காகக் கருத்துக் கணிப்பு நடத்தப்படவுள்ளதால் இரண்டு நாட்களுக்கு அரசு அலுவலகங்களை மூடும்படி பங்களாதேஷ் அரசு உத்தரவிட்டுள்ளது.

இக்கருத்துக் கணிப்பைப் பகிஷ்கரிக்குமாறு பதினைந்து கட்சிகள் மற்றும் ஏழு கூட்டணிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

பொது வேலைநிறுத்தம் செய்யும்படி கோரிக்கை விடுத்துள்ள இக்கட்சியினர், 'எல்லா அரசியல் தலைவர்களையும் உடனே விடுதலைசெய்யும்படியும், அதிகாரத்தை சிவிலியன் அரசிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும், சுயேச்சையான நியாயமான பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனவும்' வேண்டுகோள்விடுத்துள்ளனர். (து)

சோவியத் ராஜதந்திரியை

# தேடும் பணியில் இந்திய பொலிசார்

(புதுடில்லி)

புதுடில்லியில் காணமல் போன சோவியத் ராஜதந்திரி திரு. இசு ர்கெயாவைத் தேடும் நடவடிக்கையை இந்தியப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

காலையில் வழமையாக உடற்பயிற்சியில் ஈடுபட்டு வரும் இவர், கடந்த ஞாயிறு உடற்பயிற்சியின் பொருட்டு வெளியில் சென்றவர் திரும்பி வரவில்லை எனறு கூறப்பட்டது.

ஐந்து ஆண்டுகாலம் புதுடில்லி சோவியத் தூதரகத்தில் கடமையாற்றிவந்த இவர் கடந்த வருடம்தான் ராஜதந்திரியாகப் பதவியுயர்வு பெற்றவர்.

இந்த ராஜதந்திரி அரசியல் புகலிடம் கேட்டு வேறொரு நாட்டிற்குச் சென்றிருக்கலாம் என்றும் புதுடில்லி ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ராஜதந்திரி மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதி புதுடில்லியிலிருக்கும் ஆப்கானிஸ்தான், ஈரான், பாலஸ்தீனிய அகதிகளின் அலுவலகங்களையும், மேலும் பல தீவிரவாத அரசியல் குழுக்களின் காரியாலயங்களையும் இந்தியப் பொலிசார் முற்றுகையிட்டு சோதனை நடத்தினர்கள். (து)

## நியமனம்

[யாழ்ப்பாணம்]

வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு ஏ. மகாதேவா கூட்டுறவு வேலை வாய்ப்புக்குழுவில் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் முன்பு யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகவும் கடமையாற்றியவர்.

இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

## ரூபவாஹினி

மாலை

5-00 செய்திகள்
5-05 உடல் பற்றிய ஆய்வு
5-30 சிங்கள நிகழ்ச்சி
6-00 ஆங்கில தொடர் நிகழ்ச்சி
6-30 செய்திகள் (தமிழ்)
6-50 ஆங்கில நிகழ்ச்சி தொடர்
7-25 இலங்கை பற்றிய நிகழ்ச்சி
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 நாடகம்
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-20 காதம்பரி தமிழ் நிகழ்ச்சி
9-50 தகவல் நிகழ்ச்சி
11-00 ஒளிபரப்பு முடிவு.

யாழ்ப்பாணத்தில்

# கடத்தப்பட்ட மூவரும் இன்னும்விடுவிக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரிலுள்ள வர்த்தக நிலையத்திலிருந்து இம்மாதம் 14-ம் தேதி இரவு கடத்தப்பட்ட சி. எஸ் கனகரத்தினத்தின் மகன் கனகசுந்தரம் [28 வயது) ஏழுநாட்களாகியும் இன்னும் விடுவிக்கப்படவில்லை. இமமாதம் 15-ம் தேதி இரவு கடத்தப்பட்ட கணேசன் ஸ்ரோஸ் உரிமையாளரும் சண்முகானந்தாஸ் உரிமையாளரும் இன்னும் விடுவிக்கப்படவில்லை இவ்விருவரும் அவர்கள் வீடுகளிலிருந்து வானில் கடத்தப்பட்டனர்

கடத்தப்பட்ட கனகசுந்தரம் கண்பார்வை குறைந்தவரென்றும் ஒருநோயாளியென்றும் சகோதரர் தெரிவித்தார்.

14-ம் தேதி இரவு 7-00 மணியளவில் கடைபூட்டிய பின்னர் சயிக்கிலில் வந்த இருவர் கதவைத்தட்டி திறந்துஉள்ளே இருந்த கனகசுந்தரத்தை கண்களை துவாயால் கட்டி கடத்திச் சென்றுர்கள் என்று கூறப்படுகிறது.

கடத்தப்பட்டபோது அவர் தான் எந்தக் குற்றமும் செய்யவில்லையென்றும், அப்படிச் செய்திருந்தால் உடன் சுடுமாறும் கூறியதாகவும் கூறப்படுகிறது

விசாரணை செய்ய வேண்டுமென்றும் 3 மைலுக்குள் கூட்டிச் செல்வதாகவும் கூறி சயிக்கிளில் ஏற்றிய போது அவர் 'ஐயோ ஐயோ' என குளறியதாகவும் அருகில் சில கடைகளில் ஆட்கள் இருந்தபோதும் ஊரடங்கு நேரமாதலால் எவரும் உதவிக்கு வெளியில் வரவில்லை என்றும் கூறப்படுகிறது.

வந்தவர்கள் கடையிலிருந்த அவரின் உறவினரான மற்றொரு ஊழியரையும் தாக்கிவிட்டு சென்றனராம்.

மறுநாள் காலை கடை பூட்டியிருந்ததாகவும், சயிக்கிளில் வந்த இருவர் கடத்தப்பட்டவரின் சகோதரனை முற்ற வெளிப்பக்கம் கூட்டி செல்ல முயன்றதாகவும் அவர் மறுக்கவே, கடித மொன்றை ஒப்படைத்து 18-ம் தேதிவரை தவணை எனத் தெரிவித்து சென்றதாகவும் கூறப்படுகிறது. கடிதத்தில் 200 லட்சம் ரூபா கொடுக்கும் படி எழுதப் பட்டிருந்ததாகவும், கடிதத்தை படித்த சகோதரர் எங்கள் முழுச் சொத்துக்களை விற்றாலும், 200 லட்சம் ரூபா வராது எனக் கூறி இதுபற்றி பேசுவதற்கு அழைத்தபோது இருவரும் சயிக்கிளில் ஏறிச் சென்று விட்டதாக கூறப்படுகிறது இதன்பின் 7 நாட்களாக எவ்விததகவலும் கிடைக்கவில்லையாம்.

15-ம் தேதி இரவு கடத்தப்பட்ட வ. போ. ச பொறியியலாளர் நவரத்தினத்தை கடத்தி சென்றவர்கள் பெறுமதியான நகைகளை பணயமாக பெற்ற பின்னர் விடுவித்திருந்தனர். (க)

# ஆங்கில ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சி

(மானிப்பாய்)

நான்காம் ஆண்டில் கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கான இவ்வருட சேவைக்காலப் பயிற்சி பின்வரும் வட்டாரங்களில் முறையே பின்வரும் இடங்களில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை வட்டாரம் இம்மாதம் 25-ம் திகதி தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும், வட்டுக்கோட்டையில் இம்மாதம் 27-ம் திகதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும், நல்லூரில் இம்மாதம் 28-ம்திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ்ப்பாண வட்டாரத்துக்கான பயிற்சி இம்மாதம் 29-ம் திகதி யாழ் மத்திய கல்லூரியிலும், வேலணை வட்டாரம் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில், மே மாதம் 7-ம் திகதியிலும், புங்குடுதீவு (கொத்தணி) மே மாதம் 10-ம் திகதி யாழ். புங்குடுதீவு மகாவித்தியாலயத்திலும், கோப்பாய் மே மாதம் 13-ம் திகதி அச்சுவேலி சென். திரேசா மகவித்தியாலயத்திலும் பருத்தித்துறை மே 15-ம் திகதி வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், உடுப்பிட்டி மே மாதம் 17-ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், சாவகச்சேரி மே மாதம் 21-ம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் நடைபெறவிருக்கின்றன.

மானிப்பாய் வட்டாரத்துக்கான பயிற்சி சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் கடந்த 14-ம் திகதி நடைபெற்றது.

பயிற்சி வகுப்புகள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை ஆங்கில வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ க குலசேகரம் மேற்கொண்டுள்ளார்.

# ஆத்மீக வாழ்வுக்கு ஆச்சிரமம் அவசியம்

(சாவகச்சேரி)

''நாம் வாழும் போதே நமக்குத் தேவையான ஞான வழியைத் தேடி வைக்க வேண்டும் இந்த நல்வழியைத் தேட நாம் முயற்சிக்க வேண்டும்'' இவ்வாறு வைத்தியக் கலாநிதியும், அத்துவித விரிவுரையாளருமாகிய டாக்டர். வ. சின்னப்பு அவர்கள் கடந்த வாரம் மட்டுவிலில் உள்ள ஸ்ரீ ஜெகக் குரு சங்காரச் சாரிய சுவாமிகள் ஆச்சிரமத்தின் முதலாண்டு நிறைவு விழாவில் குறிப்பிட்டார்.

சமாதான நீதிபதி திரு. சி. வே. மாக்கண்டு அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் டாக்டர் வ. சின்னப்பு அவர்கள் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:- ''ஆத்மீகமாக வாழ வேண்டிய வழியைக் காட்டுவது ஆச்சிரமம் ஒன்றேயாகும் சுயேச்சை விசாரணை, தருமாநசி, சக்துவாபக்கி, அசம்சக்தி பதார்த்தபாவனை துரியம் என்ற இந்த பூமிகள் ஏழையும் பூரணமாக அறிவதற்கு ஆச்சிரமம் அவசியமானது. இதில் மக்களின் வாழ்வும் பங்கும் இன்றியமையாதது எனக் கூறினர்.

## நீதிபதிகள் நியமனம்

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு, பி. வி. சுந்தரலிங்கம் சாவகச்சேரி ம வட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மிகக் குறுகிய காலமே ஊர்காவற்றுறையில் நீதிபதியாக இருந்த இவர் ஏப்ரல் முதலாந்தேதி முதல் சாவகச்சேரிக்கு மாற்றப்பட்டுள்ளார்

தற்போது சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றும் திரு. பி. பாலவடிவேல் ஊர்காவற்றுறைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கத்தின் 51வது வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் வண்ணை வைத்தீஸ்வரர் வித்தியாலயத்தில் நடைபெற்றது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். சென்ற ஆண்டு நிர்வாகிகளே மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. து. விசுவநாதன் உப தலைவர்:- திரு அ. தம்பிப்பிள்ளை, செயலாளர்:-திரு. அ. பஞ்சாட்சரம், உப செயலாளர் திரு வி. எம். குகானந்தா, தனதிகாரி;- திரு எஸ். சிவராஜாபத்துபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## இன்றைய பலன்

மாதம்—பங்குனி
திகதி—8 (-1-3-1985)
வாரம்—வியாழன்
திதி—அமாவாசை முன்னிரவு வரை.
நக்ஷத்திரம்—பூரட்டாதி முற்பகல் வரை

மேடம்; திடீர் சந்திப்பின் மூலம் பயனுள்ள விடயங்கள் நடைபெறும்.

இடபம்: எதிர்பாராத வரவினால் திடீர் பிரயாணங்களுக்கும் இடமுண்டு.

மிதுனம்: சகோதரர் விடயத்தில் சந்தோஷமான முடிவு தென்படும்.

கடகம்: தொழிலும் பாதிக்கப்படும், மானபங்கப்படவும் இடமுண்டு, அவதானம் நன்று.

சிங்கம்: சத்துருக்களால் சஞ்சலமேற்படும், அதிக நம்பிக்கை ஆபத்தைத் தரும்.

கன்னி: குடும்பத்தில் குதூகலம் குன்றும், காதல் ஜோடிகளுக்கு சங்கடமான தினம்.

துலாம்: உற்ற நண்பர் ஒருவரால் உபத்திரவப்படநேரும்.

விருச்சிகம்: தொழில் மந்த கதியில் நடைபெறும், சிறு சச்சரவிற்கும் இடமுண்டு.

தனுசு: இல்லத்தில் இனிமைதவழும், இருப்பிட மாற்றத்துக்கான நோக்கம் உருவாகும்.

மகரம்: எதிர்பாராத வரவிற்கும் இடமுண்டு, சகோதர உதவி கிடைக்கும்.

கும்பம்: ஆத்திரப்படுவதால் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரும்.

மீனம்: வாய்வுக் கோளாறு ஏற்படும், உமது விடயங்கள் அனைத்தும் அந்தரங்கமாக இருக்க வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்


ஆனந்தி
வீடியோ சினிமா
[மனோகராவில்]
ரஜனி, சிறிதேவி
நடித்த
அடுத்த வாரிசு
[கலர்]

றீகல்
தினசரி 10-30, 2-30
மட்டும்
JUNGLE WARRIORS
கடைசிச் சந்தர்ப்பம்
இன்னும் சில தினங்களே

றீகல் மினி
தினசரி 10-15, 2-00
விஜயகாந் - ராஜேஸ்,
நளினி நடித்த
சந்தோஷக்
கனவுகள்

WINDSOR
Daily 10-30, 2-00, 4-15
"The Body"
(Adults only)
குறிப்பிட்ட சில தினங்கள்
மட்டும்

யாழ். வின்சர் மினி
தினசரி 10-30, 2-15.
CANNIBAL
HOLOCAUST
(Strictly for Adults)

லிடோ சினிமா
10-30 am, 2-00 pm,
4-00 pm
"Still of the
Night"
Adults Only

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2.30
சிவாஜி, கே. ஆர். விஜயா,
பிரபு நடித்த
நீதிபதி
(கலர்)


# முல்லைத்தீவு அகதிகளுக்கு பிரஜைகள் குழு உதவி

(யாழ்ப்பாணம்)

''முல்லைத்தீவுப் பகுதியில் அகதிகளாக விருப்போரின் நலன் கருதி 23 பெட்டி துணிப் பொதிகளை உரும்பிராய்- ஊரெழு பிரஜைகள் குழு, முல்லைத்தீவு நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் கையளித்துள்ளது.

இம் முயற்சியில் முக்கிய பங்கினை உரும்பிராய் மாதர் சங்கம், உரும்பிராய் இந்துக்கல்லூரி, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை உறுப்பினர்களும், மாணவர்களும் ஆற்றியுள்ளனர் என்றும் குறுகிய கால இடைவெளியில் இவர்கள் தந்துதவிய ஒத்துழைப்பினால் எம்மால் இப்பொதிகளை விரைவில் அனுப்பி வைக்க முடிந்தது என்றும் உரும்பிராய் பிரஜைகள் குழு இவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் எமது துணிப் பொதிகளை முல்லைதீவிற்கு எடுத்துச்செல்ல போக்குவரத்து வசதிகளைத் தந்துதவிய மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசாவுக்கும் நன்றி கூறுவதாக உரும்பிராய்- ஊரெழு பிரஜைகள் குழுச் செயலாளர் திரு சி. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

# தீ விபத்தில் இளம்பெண் படுகாயம்! பெரும் சேதம்!

(யாழ்ப்பாணம்)

திடீரென ஏற்பட்ட தீவிபத்தால் இளம் குடும்பப் பெண் படுகாயமடைந்ததுடன் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளும் நாசமானது.

நேற்று முன்தினமிரவு மல்லாகத்தில் இத்துயரச் சம்பவம் இடம்பெற்றது.

திருமதி அருள்வேல்நாயகி சிவலிங்கநாதன் (25 வயது) என்பவரே தீக்காயங்களுக்குள்ளானவர் ஆவார்.

வீட்டுக்குப் பக்கத்தில் கடை ஒன்று நடத்தி வந்ததாகவும் கடைக்குள்ளேயே உடுபிடவைகள், 20 பவுண் நகைகள் குடும்பத்தினரின் அடையாள அட்டைகள், உணவு முத்திரைகள், பாஸ்போர்ட், தராதரப் பத்திரங்கள் ஆகியன பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

அங்கு வாகனம் ஒன்றுக்குப் பெற்ரோல் விட்டுக்கொண்டிருந்த சமயம் பெற்ரோல் வழிந்து எரிந்து கொண்டிருந்த லாந்தர் விளக்கடியில் பட்டதும் திடீரெனப் பற்றிய தீ வேகமாகப்பரவி கடைக்கட்டிடமும், உடைமைகளும் எரிந்து சாம்பரானது. (மா)


YARL HALL பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
விஞவிடை வகுப்பு A/L 1985
ஆரம்பம்: 22-3-85 2-00 மணி
G. C. E. A/L 1987 வகுப்பு
ஆரம்பம்: 23-3-85 காலை 11 மணி
ஆசிரியர்கள்: திரு, சிவவீரசிங்கம்,
திரு. ஞானேந்திரன்,
திரு. கமலசிங்கம்,
மற்றும் பிரபல ஆசிரியர்கள்.
இன்று தொடக்கம் பெயர்கள் பதிவு செய்யப்படும்,
(2361)


## 2வது ஆண்டு நினைவஞ்சலி

திரு. M. ஐயாத்துரை
[பொலிஸ் கான்ஸ்டபிள்]
மலர்வு:10-06-1925 உதிர்வு:15-03-1983

ஆருத்துயரில் எம்மையாழ்த்தி, மீளாத் துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே!
ஊண் தந்து, உடைதந்து, முத்தமும் தந்து, சீராட்டி, பாராட்டி, எமை வளர்த்த பப்பாவே! மண்விட்டு விண்சென்று, ஈராண்டு சென்றாலும் எமை விட்டு உம் நினைவு என்றென்றும் நீங்காது.

மனைவி, பிள்ளைகள், ரவி, ரூபி, சாந்தி ஜெயந்தி.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
2373

## அட்டன் நஷனல் வங்கியின் கொள்ளையால் பாதிக்கப்பட்டோர் கூட்டம்

அண்மையில் யாழ்ப்பாணம் அட்டன் நஷனல் வங்கியில் நடைபெற்ற கொள்ளையால், பாதுகாப்பிற்காக ''லொக்கரில்'' வைத்த தமது உடமைகளை இழந்தவர்கள் அனைவரையும் ஓர் ஆலோசனைக் கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

இடம்: யாழ்ப்பாண வை. எம். சீ. ஏ. கட்டடம்.
(Y. M. C. A. Kandy Rd. Jaffna.
காலம்: சனிக்கிழமை 23-3-85
நேரம்: பிற்பகல் 3 மணி.

R. J. குணரத்தினம்
அழைப்பாளர்

இல. 50, பலாலி வீதி,
கோண்டாவில்.
2382

## 31-வது நாள் நினைவு அஞ்சலி

அமரர் சிவகடாட்சம் பாலசிங்கம்
(சிக் அன் கைன் பாலா)
தோற்றம்:15-12-1938 மறைவு:19-2-1985



''வையத்துள் வாழ்வாங்கு வாழ்டவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

நம்மோடு ஒட்டி உறவாடி வாழ்ந்த ஒருவர் இன்று இல்லை கணவனாய், தந்தையாய், சகோதரனாய், மாமனாய், மருமகனாய், மைத்துனனாய், நண்பனாய் வாழ்ந்த திரு சிவகடாட்சம் பாலசிங்கம் அவர்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எங்களைவிட்டுப் பிரியாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


மனைவி, பிள்ளைகள், சகோதரன், சகோதரிகள், மருமக்கள், மாமா, மாமி, மைத்துனர்கள், மைத்துனிமார்கள், நண்பர்கள்.

366, கச்சேரி-நல்லூர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
2375


ஹோம் பினன்ஸ் லிமிட்டட்
பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
கொழும்பு — யாழ்ப்பாணம் — கொழும்பு
கொழும்பிலிருந்து புறப்படும் நேரம்:
இரவு 10-00 மணி
யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும்
நேரம்: காலை 8-00 மணி
கட்டணம் ரூபா 100-00
கொழும்பு ஆரம்பதினம்:
22-3-85 வெள்ளி
யாழ்ப்பாணம் ஆரம்பதினம்:
24-3-85 ஞாயிறு


## 61ம் நாள் நினைவஞ்சலி

சிவக்கருவூலர் Rtn. P.H.F.
அமரர் இ. அரசரத்தினம்
(ஸ்தாபகர், அரஸ்கோ தொழிலகங்கள்)
மலர்வு:23-09-1918 மறைவு:20-01-1985



அன்பின் திருவுருவாய், அறிவின் சுடராய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், சிறந்த வழிகாட்டியாய், அன்புக்கு இலக்கணமாய் இருந்து எம்மையெல்லாம் வாழவைத்து எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்ற, பாசமிகு தெய்வமே, எங்களை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென மீளாத் துயில் கொண்ட உங்களை மறக்கமுடியாது கலங்கி நிற்கிறோம். நீங்கள் இவ்வுலகைவிட்டுப் பிரிந்து 61 நாட்கள் சென்றுவிட்டாலும் உள்ளத்தால் எம்மை விட்டுப் பிரியாமல் இருந்து எம்மைக் காத்து நல்வழிகாட்டப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் என்றும் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
2371

# ஆள் கடத்தலை 'ரெலா'வும் கண்டிக்கிறது

(யாழ்ப்பாணம்)

கோயிற் கொள்ளைகள், ஆள் கடத்தல், தனியார்கொள்ளைகள் போன்ற செயல்களினால் நாம் அனைவரும் செயற்படும் தமிழீழப் போராட்டம் பின் தள்ளப்படுகிறது. இவற்றை நாம்வன்மையாக கண்டிக்கின்றோம். இச்செய்கைகளுக்கும் எமது இயக்கத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதனையும் நாம் தெட்டத்தெளிவாக கூறுகின்றோம் என்று தமிழீழ விடுதலை இராணுவம் (ரெலா) விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

''தமிழீழ மக்கள் சிறிலங்கா அரசாங்கத்தால் அனுபவித்து வரும் கொடுமைகள் போதாது என்று மேற்படி சம்பவங்களும் தமிழீழ மக்களுக்கு மேலும் துன்பத்தையே கொடுக்கும் இத்தகைய செயல்களில் ஈடுபடுவோரை நாம் கண்டிப்பதுடன் அவர்களை வெகுவிரைவில் மக்கள்மத்தியில் இனங்காண்போம்'' என்று அந்த அறிக்கைமேலும் தெரிவித்தது.

## முதலாம் தவணைப் பரீட்சை 1985—நேர அட்டவணை

| தரம் | நேரம் | 28-3-85 | 29-3-85 | 30-3-85 | 1-4-85 | 2-4-85 |
|---|---|---|---|---|---|---|
| தரம் 10 | 8-15—11-45 | கணிதம் | விஞ்ஞானம் | தமிழ் | சமூகக்கல்வி | மனையியல்/ விவசாயம் |
| | 11-45—1-15 | ஆங்கிலம் | சுகாதாரம் | சமயம் | அழகியற்கல்வியும் வர்த்தகமும் | |
| தரம் 9,8 | 8-15—10-15 | விஞ்ஞானம் | கணிதம் | சமூகக்கல்வி | | |
| | 10-30—12-00 | தமிழ் | சமயம் | ஆங்கிலம் | | |
| | 12-30—2-00 | சுகாதாரம் | அழகியற்கல்வியும் (தரம்9 வர்த்தகமும்) | மனை/விவ | | |
| தரம் 7,6 | 8-30—9-30 | சமூகக்கல்வி | தமிழ் | கணிதம் | | |
| | 9-45—10-45 | சமயம் | விஞ்ஞானம் | ஆங்கிலம் | | |
| | 11-15—12-15 | மனை/விவ | அழகியற்கல்வி | சுகாதாரம் | | |
| தரம் 5,4 3 | 8-30—9-30 | | | | தமிழ் | ஆங்கிலம் |
| | 9-45—10-45 | | | | கணிதம் | சமயம் |
| | 11-15—12-15 | | | | சூழல் | |

### பீரங்கித் தாக்குதல் பற்றி

# கடற்படைத் தளபதியிடம் பிரஜைகள் குழு புகார்

(யாழ்ப்பாணம்)

கடந்த திங்கள் இரவு காரை நகர் வடக்கு மேற்கு பகுதியில் சுமார் அரை மணி நேரம் ஷெருக்கட், பீரங்கி தாக்குதல்கள் நடைபெற்றதாகவும் இதனால் சில வீடுகளுக்கு சேதமும் ஒரு பெண்ணுக்கு சிறுகாயமும் ஏற்பட்டதாகவும் காரைநகர் பிரஜைகள் குழு தலைவர் திரு. பொ. நவரத்தினம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கடற்படைத் தளபதியை நேரில் சந்தித்துப் புகார் செய்ததுடன், தாக்குதல் நடந்த இடத்தில் கிடந்த ஒரு குண்டின் அடிப் பகுதியையும் அவரிடம் காட்டியதாகவும் தெரிவித்தார். மேற்படி குண்டின் பகுதி தங்களது குண்டின் பகுதியாக இருக்காதென்றும், அதனைப் பரிசோதனைக்கு அனுப்புவதாக கடற்படைத் தளபதி தெரிவித்ததாகவும் திரு. நவரத்தினம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் பிரஜைகள் குழுத் தலைவருடன் இன்று கடற்படைத் தளபதியைச் சந்திக்கவிருப்பதாகவும் திரு. நவரத்தினம் கூறினார்.

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா

(கொக்குவில்)

கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மஞேன்மணி அம்பாள் ஆலய மண்டல அபிஷேக பூர்த்தி, நேற்றுக் காலை நடைபெற்ற சகஸ்ர சங்காபிஷேகத்துடன் நிறைவு பெற்றது. மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவில் ஏராளமான பக்தர்கள்கலந்துகொண்டனர்

பங்குனித் திங்கள் இரண்டாம் வாரம் எதிர்வரும் 25ம் திகதி நடைபெறும்.


## மரண அறிவித்தல்

### தா. யோகராசா

மோட்டார்கார் உதிரிப்பாக விற்பனையாளர் (நாச்சிமார் கோவிலடி) தா. யோகராசா காலமாகிவிட்டார். அன்னார் கல்வியங்காடு புதிய செம்மணி வீதி தாமோதரம்பிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் மூத்த புதல்வரும், இராசேஸ்வரியின் அன்புக்கணவரும், தர்மினியின் அன்புத் தகப்பனும், இராமச்சந்திரன், நற்குணராசா, சந்திராசா, தயாநிதி சிறிகந்தராசா, செல்வராசா கமலநிதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 21—3—85 வியாழக்கிழமை காலை 11-00 மணியளவில் புதிய செம்மணி வீதி இல்லத்திலிருந்து செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 2381



## மரண அறிவித்தல்

### அருளம்பலம் குலசேகரம்பிள்ளை

இளைப்பாறிய ஆசிரியர் (Union College, Tellipalai) அருளம்பலம் குலசேகரம்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், Dr உருத்திராதேவி, பரமகுரு (U. S. A.), ரதிவதனி கிருஷ்ணராஜா, இராஜசேகரம்பிள்ளை (பொறியியலாளர் Canada), அருளானந்தன் (பொறியியலாளர், Nigeria) ஆகியோரின் அன்புத்தந்தையும், Dr, பரமகுரு, Dr. கிருஷ்ணராஜா (அரசினர் வைத்தியசாலை யாழ்ப்பாணம்), பதமினிதேவி, கமலாவின் மாமனுருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை (21—3—85) காலை 10 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

122, இராசாவின் தோட்டம் வீதி,
நல்லூர். 2388


## கடத்தப்பட்டவரை விடுவிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடத்தப்பட்ட தனது மகன் கனகசுந்தரத்தை மனிதாபிமான முறையில் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு கடத்தப்பட்டவரின் தாயாரான காரைநகரைச் சேர்ந்த திருமதி க சரஸ்வதி வேண்டுகோள் விடுத்துள்ளார். அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;-

'எனது மகன் கனகசுந்தரம் இம் மாதம் 14ம் திகதி இரவு கடையில் வைத்து கடத்தப்பட்டுவிட்டார். இவருக்கு அரசியலில் எவ்வித சம்பந்தமும் இல்லை. எத்துரோகத்தையும் மனதாலும் நினைக்காத நிரபராதி ஆகவே கடத்தப்பட்டவரின் தாயாராகியநான் அவரை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு கடத்தியர்வர்களைத் தயவாகக் கேட்கின்றேன்''. (க)

### கடத்தப்பட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகர வர்த்தகர்கள் சங்கக் கமிட்டிக் கூட்டம், சங்கத்தலைவர் திரு. எஸ். வி. முருகேசு தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம், கூட்டமுடிவில், அறிக்கையாக வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''யாழ்ப்பாண மாநகரில் வர்த்தகம் செய்யும் சில வர்த்தகர்கள் கடத்திச் செல்லப்பட்டு பணயம் வைக்கப்பட்டுள்ளனர். இந்த வர்த்தகர்கள் கடத்திச் செல்லப்பட்டதை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. இவர்களைக் கடத்தியதற்கு பொறுப்பாக இருந்தவர்கள் மனிதாபிமான அடிப்படையில் எந்தவித நிபந்தனையுமின்றி, எதுவித தாமதமுமின்றி உடனடியாக விடுதலை செய்து, தங்கள் வீடுகளுக்கு அவர்கள் செல்ல அனுமதிக்கவேண்டும், அவர்களின் தாய், தந்தையர், மனைவி, மக்கள், சகோதரர்கள், உற்றார், உறவினர் மிகுந்த மனவேதனையுடனும், கவலையுடனும், ஏக்கத்துடனும் இருக்கின்றார்கள். அவர்களின் துன்பம் எடுத்துச்சொல்லமுடியாத அளவு வேதனையைத் தருகின்றது. எமது வேண்டுகோளை ஏற்று எமது சகோதர வர்த்தகர்களை விடுதலை செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மிகவும் பணிவுடன் வேண்டுகின்றோம். எமது கோரிக்கையை ஏற்று அவர்கள் விடுதலைசெய்யப்படாவிடில் மீண்டும் 25ம் தேதி தொடக்கம் யாழ்ப்பாண மாநகர வர்த்தகர்கள் யாவரும் எதுவித பேதமுமின்றி பணயம் வைக்கப்பட்டிருக்கும்வர்த்தகர்களை விடுவிக்கும் வரை கடைகளைப்பூட்டி தங்கள் பலமான எதிர்ப்பை தெரிவித்துக் கொள்வார்கள். அப்படிச் செய்யும்போது மக்களின் அத்தியாவசியச் சேவைகள் யாவும் மிகப்பாதிப்படையும். நாங்கள் கடைகளை மூடும் காரணத்தை மக்கள் அறிவார்கள். அவர்களும் எமக்கு நல்லாதரவு தருவார்கள் என்று பூரணமாக நம்புகின்றோம் அருகாமைப் பட்டினங்களில் வியாபாரம் செய்யும் வர்த்தகர்களும் எமக்கு ஆதரவு தரவேண்டும். வர்த்தகர்களின் ஒற்றுமையை எடுத்துக்காட்டி சாத்வீகமான அமைதியான முறையில் கடத்தப்பட்டிருக்கும் வர்த்தகர்களை விடுதலை செய்யும்வரை போராடுவோம்'' (மா-க)

### சுட்டு வீழ்த்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாப்டருக்கு சிறிது சேதம் மட்டுமே ஏற்பட்டதாக கூறினார்

விமானப்படை விமானத்தைநோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## வணசிங்கா தமிழகம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. டி. எஸ். கே வணசிங்க, தமிழ்நாடு பயணமானுர்.

புனித தலங்களைத் தரிசிப்பதற்காகத் தமது துணைவியாருடன் பயணம் மேற்கொண்டுள்ள திரு. வணசிங்க, இருவார காலத்தின் பின்னர் நாடு திரும்புவார். அவர் நாடு திரும்பும்வரை சிரேஷ்ட துணைத் தலைவர் திரு. ச. முத்தையா இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவராகக் கடமையாற்றுவார் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

## மகியங்கனை இடைத்தேர்தல்

(கொழும்பு)

மகியங்கனை தேர்தல் தொகுதிக்கான இடைத்தேர்தல் நியமனப்பத்திரங்கள் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டவுள்ளன.

தொழில் அமைச்சர் கப்டன் சி.பி. ஜே. செனவிரத்தின காலமானதால் இங்கு இடைத் தேர்தல் நடைபெறுகிறது.

நேற்றுவரை 6 பேர் தேர்தலுக்காக கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தனர். இவர்களில் ஐ தே க. வேட்பாளர் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சேர்ந்தவர். மற்ற அனைவரும் சுயேச்சை வேட்பாளர்கள்

## பல்கலைக்கழக மாணவர் உதவி

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கும் அகதிகளுக்கு உதவிகள் அளிப்பதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீண்டும் முன்வந்துள்ளனர்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்களால் பத்தாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப் பட்டுள்ளது தெரிந்ததே.

இன்னலுறும் இம்மக்களுக்கு உதவுவதற்கு யாழ்.மாவட்டத்தில் பலசமூகசேவை நிறுவனங்கள் நிதி, உடுபிடவைகள் பொதுமக்களிடமிருந்து அண்மைக்காலங்களில் அன்பளிப்பாகச் சேர்த்தபோதிலும் அவை அகதிகளுக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும், அவற்றை யாழ் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தால் முல்லைத்தீவு அகதிகளுக்கு உரிய முறையில் வழங்க உத்தேசித்திருப்பதாகவும் மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். [மா]

### ஈரான்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பயணமானுர்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியின் விசேட தூதுவராக இரு நாடுகளுக்கும் செல்லும் திரு. கானுடன் அமைச்சின் செயலாளர் திரு. ரமேஸ் பண்டாரியும் செல்கிறுர்.

முதலில் ஈராக் செல்லும் இவர்கள் பின்னரே ஈரான் செல்வார்கள்,

### வடக்கில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும், தொழிற்சங்க வித்தியாசமின்றி சகல பாடசாலை ஊழியர்களும் ஆதரிக்கவேண்டுமென்றும் தொழிற்சங்க கல்வி கிளைத் தலைவர் திரு. தவரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**பாடசாலைகளில்**

பாடசாலை வளவில் ஆசிரியர்கள் சுலோக அட்டைகளுடன் ஒரு மணிநேரம் வேலை நிறுத்தம் செய்வார்களென்றும் இதேபோன்று அரசாங்கக் காரியாலயங்களிலும் ஊழியர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கி வேலைநிறுத்தம் செய்வார்களென்றும் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

**பஸ்களும் நிற்கும்**

பஸ்கள் இன்று காலை 10 மணிக்கு, வீதிகளில் நின்று விடுமென்றும் பின்னர் 11 மணிக்கே புறப்படுமென்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பல பொது ஸ்தாபனங்களும், சமய ஸ்தானங்களும் இந்த வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.